07.06.2024

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

அமர்வு வழக்கு எண். 20/2019

அ.சா.8

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நசீர்பாஷா | | |
| த/பெ | நன்னிமியா | | |
| கிராமம் | எடப்பாளையம் | தொழில் | |
| தாலுக்கா | திருக்கோவிலூர் | வயது | 40/2024 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

**இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.**

**முதல் விசாரணை**

**நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது** விவசாயம் செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன அப்துல் ஜபாரை எனக்கு தெரியும். அ.சா.1 சம்சுதினை எனக்கு தெரியும். சாட்சிகள் சம்சுதின், நபிபாஷா, மஜித், கலால், ரொகையாபீ, ஜாபர் ஆகியோர்களை எனக்கு தெரியும். எனக்கு ஆஜர் எதிரிகளில் 1ம் எதிரி மோகன், 2ம் எதிரி ரவி, 3ம் எதிரி டிரைவர் செல்வம் மற்றும் இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட வேறு ஒரு நபரையும் தெரியும். அவர் இங்கு இருக்கிறாரா என்றால் இருக்கிறார். கடந்த 27.06.2018ம் தேதி நான் மதியம் சுமார் 1.30 மணிக்கு நான் எடப்பாளையம் கிராமத்தில் காலனி அருகில் உள்ள வீரன்கோவில் அருகில் உள்ள என் நிலத்திற்கு சென்றபோது வீரன் கோவில் அருகில் எங்கள் ஊரை சேர்ந்த மோகன், ரவி, செல்வம் மற்றும் ஒரு அடையாளம் தெரிந்த நபர் பேசி கொண்டிருந்தார்கள். அந்த ஒரு அடையாளம் தெரிந்த நபர் இங்கே இருக்கிறார். சாட்சி 4ம் எதிரியை அடையாளம் காட்டினார். அவர்கள் ஏதோ பேசி கொண்டிருந்தார்கள். அவர்கள் இருந்த இடத்தில் ஒரு கார், ஒரு மோட்டார் சைக்கிள் இருந்தது. அவர்களை பார்த்த உடன் நான் ஏதோ பேசி கொண்டிருக்கிறார்கள் என்று கருதி என் நிலத்திற்கு சென்று பார்த்துவிட்டு வந்துவிட்டேன். அதன் பிறகு அன்று மாலை 6.30 மணியளவில் அப்துல்ஜபார் அவரது

வீட்டில் கொலை செய்யப்பட்டு இறந்து கிடப்பதாக அவரின்  பேத்தி எனக்கு தகவல் கொடுத்தார். இதுசம்மந்தமாக என்னை காவல் துறையினர் விசாரணை செய்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

5ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது

3ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை

1,2,4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணையை defer செய்ய மனுதாக்கல் செய்து அது செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.